மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 50/2025**

வா.சா. 1 கனகராஜ், S/o பால்ராஜ்

நாள்: 08.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**1)** நான் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் நான் குடியிருந்து வரும் வீட்டுக்கு பின்னால்தான் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். 1வது வாதி முத்தையா எனது அண்ணன் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு என்னுடைய வழக்கறிஞருக்கு தகவல் தெரிவித்தது யார் என்றால் நானும் என்னுடைய அண்ணனும் சேர்ந்து தான் தகவல் தெரிவித்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

2) 2வது இலக்கச் சொத்தும் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்து அந்த முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன் மேலும் என்னுடைய கொள்ளு தாத்தா கணபதி என்பவரும் அந்த முகவரியில் தான் குடியிருந்து வந்தார். என்னுடைய கொள்ளு தாத்தா கணபதிக்கு வழக்கு சொத்துக்கள் எவ்வாறு

பாத்தியப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய கொள்ளு தாத்தாவுக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டிருந்தது. வழக்குச் சொத்துக்கள் என்னுடைய கொள்ளு தாத்தா கணபதிக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

3) வா.சா.ஆ.3 ஆவணம் ஆனது யாருடைய பெயரில் இருந்து வருகிறது என்றால் சாமி அடிகள் மகன் பால்ராஜ் என்பவரின் பெயரில் இருந்து வருகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கான சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சர்வே எண் 1535/50 ல் 00.56.0 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கான முன் பாத்தியஸ்தர் கணபதி என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள மாதிரி வரைபடமானது எவ்வாறு தயார் செய்யப்பட்டது என்றால் ஸ்தலத்தில் இருக்கும் அளவுகளை வைத்து நாங்கள் தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் வழக்கறிஞர் தயார் செய்தார். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பக்கம் எண் 3 ல் கிழமேலடி வடதலை 17–¼ அடி, தென்தலை 17–¼ அடி, தென்வடலடி கீழ்தலை 35–¾ அடி, மேல்தலை 35–¾ அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது.

4) வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்ணுக்கான நில அமைப்பானது அதே ஆவணத்தில் பின்பக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 உயில் ஆவணமானது யாரால் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால்

எங்களுடைய தகப்பனாரால் எனக்கும் என்னுடைய அண்ணனுக்கும் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் ஆகும். வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கான விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 57.30 சமீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் நத்தம் சர்வே எண் 1535/50ல் 0.00.56.0க்கு 56 சதுர மீட்டராக உள்ளது என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

5) வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் தான் என்னுடைய தகப்பனார் உயில் ஆவணத்தை வா.சா.ஆ.4 ஆவணமாக எழுதிக் கொண்டார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கும் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வழக்கு சொத்துக்கான அளவுகளுக்கும் இடையே முரண்பாடுகள் காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்தின் அளவுகளை காட்டிலும் கூடுதலாக உயில் ஆவணம் மூலமாக எனக்கும் என்னுடைய அண்ணனுக்கும் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

6) வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய வீடு காண்பிக்கப்பட்டுள்ள இடத்துக்கு வடக்கே கிழமேல் தெரு உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீட்டுக்கு மேற்கு பக்கம் காலி இடமாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல கட்டுமானம் உள்ளது. என்னுடைய வீட்டுக்கு கிழக்கு பக்கம் யாருடைய வீடு உள்ளது என்றால் ரத்தினம் என்பவரின் வீடு உள்ளது. என்னுடைய வீட்டுக்கும் ரத்தினம் என்பவரின் வீட்டுக்கும் தென்வடல் பொதுச் சுவர் என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீட்டுக்கு கிழக்கு பக்கம் இருக்கும் ரத்தினம்

என்பவரின் தென்வடல் சுவற்றின் நீளம் எவ்வளவு இருக்கும் என்றால் 23 அடி முதல் 25 அடி வரை இருக்கும்.

7) எனது வீடு அமைந்திருக்கும் பகுதியானது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டு மனைகள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீடு அமைந்திருக்கும் பகுதிக்கும் அதனை சுற்றியுள்ள பகுதிக்கும் அரசாங்கத்தால் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டதால் அதற்கென தனியாக வரைபடம் உண்டு என்று சொன்னால் சரிதான். மேற்படி அரசாங்கத்தால் தயார் செய்யப்பட்ட வரைபடங்கள் எதுவும் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வரைபடங்கள் தாக்கல் செய்யும் பட்சத்தில் அரசாங்கத்தால் ஒவ்வொரு தனி நபருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்கான அளவுகள் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். வரைபடம் அரசாங்கத்திடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் எங்களுக்கு குறைவாக இடம் ஒதுக்கப்பட்ட விபரம் தெரியவரும் என்கின்ற காரணத்தினால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8) வரைபடங்களை பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராகய உள்ளேனா என்றால் தயராக உள்ளேன்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு